ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2151/7 - 2019 නොවැම්බර් මස 25 වැනි සඳුදා - 2019.11.25

*2151/7 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 25 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*பணிப்புரை இல. 69*

**2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க, பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபைச் சட்டம்**

*10(1)(அ) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் 10(1)(அ) ஆம் பிரிவினால் உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் தொழிற்படுகின்ற, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது, மிதவை இயக்க வால்வுகள்* (float operated valve) *மற்றும் அதன் உதிரிப்பாகங்களின்* (spare parts) *அனைத்து உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் வியாபாரிகளுக்கும் அனைத்து மூன்று (சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம்) மொழிகளிலும் தெளிவாகவும் அழிக்க முடியாத வகையிலும் பின்வரும் தகவல்களினை ஒவ்வொரு பொதியின் மீதும் அச்சடித்தல் வேண்டுமென பணிப்புரை விடுக்கின்றது.*

1. வியாபாரக் குறியீட்டுப் பெயர் ;
2. உற்பத்திப் பொருள்/உதிரிப்பாகத்தின் பெயர் ;
3. குறித்த உற்பத்திப் பொருள் இலங்கையில் உற்பத்தி/ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டிருப்பின் உற்பத்தியாளரின் பெயர் மற்றும் முகவரி, உற்பத்தியாளரின் தொடர்பு விபரங்கள் ;
4. இறக்குமதியாளரின் பெயர், முகவரி மற்றும் தொடர்பு விபரங்கள் ;



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

5. உற்பத்தி செய்த நாடு (தொழிற்சாலை அமைவிடம்) ;
6. இலங்கைக் கட்டளைகள் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட பதிவு இலக்கம் ;
7. தொகுதி அடையாள இலக்கம்/குறியீடு ;
8. ஆகக்கூடிய சில்லறை விலை ;
9. வால்வின் பெயரளவிலான அளவு ;
10. அழுத்த வகையீடு (குறைந்த/நடுத்தர/உயர்) ;
11. உருவமைப்பு இலக்கம் ;
12. மிதவைப் பொருள் (Material of the Float) ;
13. நிறுவுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்.

இப்பணிப்புரையானது, 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் கட்டளைப்படி,

கலாநிதி லலித் என். செனவீர,
தவிசாளர்.

கொழும்பு 1,
2019, நவெம்பர் 22.

12-318

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.